
# “மனோஜயம்”/

# I

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா





# "மஹேஜயம்"!


இதழ் ஒன்று. I

## பொருளடக்கம்

1. பரமும் ஸ்ரீபகவானும்------------------------------------------------௨

௨. மனோஜயம்-----------------------------------------------------------7

எல்லாம் நீ!



"ஸத்திய வாக்கு" (1)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடிரு.

"ஸத்தியம் பேசுவதால், தர்மம் நிலைபெறும்!"

# "ஸ்ரீ ஸத் குரு திருவடி துணை!"

# "நம்பினோர் கெடுவதில்லை!"

# "தெய்வம் மனுஷ்யாரூபம்!"

# "யத் பாவம் தத் பவதி!"

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்"

# "ஓம்"

# "அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்,"

# "அகமே எல்லாம்!"

# "ஜெகம், பரமும், ஜீவர்களும்,"

# "சிறிதும் இல்லை!"



உ

பரம்:- யானை. ௨

தேவநம் வங்கள் அதன் அவயங்கள். அவயங்கள் யானை ஆகாது. அவயவங்களில் யானை இல்லை. ஆனால் யானை இல்லாமல் அவயங்கள் இல்லை!

யானை ஸத்யம். அவயங்கள் நாமரூபம் ஆகும்.

# "பரமஹம்சரூபகவாறும்!"

ஓர் சிறிய உதாரணம்:- ஐந்து குருடர்கள், ஓர் யானையை, தடவித் தடவி, உணர்ந்த விதம்? போல் இருக்கிறது! எப்படி என்றால்? ஒருவன் துதிக்கையை, தடவிப்பார்த்து விட்டு, யானை ஓர் உலக்கை போன்றது என்றான்.


மற்றொருவன், காதைத் தடவிப்பார்த்து விட்டு, யானை ஓர், முறம் போன்றது என்றான்.

மற்றொருவன், காலைத் தடவிப்பார்த்து விட்டு, யானை ஓர் தூண் போன்றது என்றான்.

மற்றொருவன், வயிற்றை தடவிப்பார்த்து விட்டு, யானை ஓர் பானை போன்றது என்றான்.


மற்றொருவன், வாலைத் தடவிப்பார்த்து விட்டு, யானை ஓர் ஒட்டடைகுச்சி போன்றது என்றான்.

இப்படியாக, குருடர்கள் கண்ட யானையின் "நாமரூபம்" அமைந்திருந்தது. இது பலமுறை சொன்னகதையே! கேட்டகதையே!




(3)

இனி இதன், உட்கருத்தை உணர்வீர்.
நீ எந்த வடிவில் கருதினும்,
அந்த வடிவில் தோன்றுவார்! (ஸ்ரீபகவான்)
(அம்பிகை) சொந்த வடிவம், வெளியிடுவார்;
சுத்த மோன சின்மயமாம்!
என்றதில், அக்ஷராதீத, பர சொரூபமானது,
அன்பர்கள் "கருத்தை" கொண்டு, அவர்கள்
"மனதிற்கு" ஏற்றவாறு, அவர்களுக்காக,
"பலபல" வடிவங்களாகி வருகிறது.
சிவனே! கணபதியோ! முருகனே! ராமனே! கண்ணனே!
இன்னமும் அனேக நாமரூபத்தில் கருணையின் வடிவில்
தோன்றுகிறது; என்பதே ஸத்தியம்!
எப்படி ஓரியாமியாதை, குருடர்களுக்கு, பலபல
நாமரூபங்களாக, தோற்றுகிறதோ, அதேநியாயம்
அஞ்ஞானிகளுக்கு (கவலைக்குறை
மயக்கத்தில் இருப்பவர்களுக்கு) பலபல, ள
புராணக்கதை (பொய்கதை) கேட்டவர்களுக்கே;




(4)

பலபல நாமரூபமாக தோன்றும் இவ்வாசகம்,
"அத்வைதம்" உணர்ந்தவர்களுக்கு மட்டுமே
பொருந்தும். ஆனால் "ஆரம்ப" சாதனையாளர்களுக்கு,
பொருந்தாது என்பதும் சத்தியமே!
ஆரம்பசாதனையாளர்களுக்கு அவசியம் அந்த
காலாதீத பர சொரூபம் "வந்தே" ஆகவேண்டும்!
இது இக்கலியுகத்திற்கு மட்டுமே பொருந்தும்.
ஆகவேதான், எம்ஸ்ரீ மஹாத்மா சொன்னார்?
"பரதத்துவ வடிவாக" தோன்றி எழுந்து!
(அவர்)
அதாவது, அற்புத பரமே! தற்புத பரமாத்மாவாக!
திவ்ய ஜீவாத்மாவுக்காக இறங்கி வருகிறது!
என்றும் இறங்கி வந்தே ஆகவேண்டுமென்றும்
உறுதியாக சொன்னார். இதைக்கண்ட ஓர் அன்பர்
பாடும்போது - படி சொல்வாம், கடந்த சுத்த
பிரம்மவஸ்துவாய் இருந்தும், பக்தியால்
மகிழ்ந்து தோன்றும், திவ்ய மூர்த்தியே என்றும்
பாடியிருக்கிறார். அந்தரங்கம் தாம் விரும்புவதை
உணர்ந்தவர்க்காக, இப்படியெல்லாம், விளையாடுகிறதென,



ஸ்ரீமஹான்கள் சொல்வர். இங்கு நாமரூப ஜகத்தாக இருந்து "மாயா" ஆட்டுகிறது! மாயாவின், சைதன்ய மாயா "மனம்" ஆடுகிறது! அம்மனதின் கர்மவினையான எண்ணமே "வினை"யாக, தோற்றம் எடுத்து, அது புண்ணிய பாவம் எனப்பேசப்பட்டு, அதுவே ஜனன மரண, சுழற்சி என்று, இல்லாத "உலகம்" இயங்கப்படுகிறது. இம்மனதின், விகாரங்களே நான்! என்றும், எனது! என விளம்பப்படுவதனாலும். விளங்கப்படுவதனாலும். அம்மனமே பேசுகிறது! அம்மனமே கேட்கிறது! அம்மனமே நான் இன்ப துன்பம், அனுபவிக்கிறேன்! என்றும் "பிதற்றுகிறது"! உண்மையில், மாயாவும் இல்லை மனமும் இல்லை! எப்படி என்றால், நாமரூப தோற்றங்களை, மனம் சொந்தம் கொண்டாடுவதை விட்டு விட்டால், மனம் செயல் இழந்து போகும்! இங்கு எல்லாம் "நாமே" எல்லாம் "நம்முடையதே" என, அறிவு பூர்வமாக உணர்ந்து விட்டால், மனம் இறந்து போகும்! எல்லாம் நம்முடையதாகி வேறொன்றும் இல்லை என்றும்.



யார் மீது? எதன் மீது? தேவையோ? ஆசையோ? கோபமோ? உண்டாக முடியும்? இந்த ஓர் உண்மையை மட்டும் கருத்தில் கொண்டால் போதுமானது! இது உதாரணமே!


தாவரத்த அந்த ஒன்றை, வெறும் "மனதை"

அதன் நிழலான, மாயாவை "ஜகமாகவும்", ம்!

அம்மனிதனும் அவளும், இணைந்து பிணைந்த [illegible]

நிலையில் "காமனை" ஆகவும். அந்த நிலையில், "நாமரூப" அண்டாண்ட பிரம்மாண்டங்கள் இந்த ஜீவ ஸ்தாவர வர்க்கங்கள், தோன்றும் உண்டாகியிருக்கின்றன என்றும். அதை மனம் வைத்து, சொந்தம் கொண்டாடி விளையாடுகிறது என்றும். மனம் விளையாட்டை விட்ட நிலையில், விளையாட்டும் இல்லை! விளையாடுவோரும் (ராமமேயம்) இல்லை! "அது அது"வாகவே இருக்கும்!

நாமும் அதுவாகவே இருப்போம்! என்று பிரம்மானந்த நிலையில், மனதை ஜயித்து! மனம் மறந்த நிலையில் சகஜானந்த நிலை பெறுவாயாக! இதுவே மனோஜயம் ஆகும்.



# மனோ ஜயம்!

(1) நான்! என்றல்! எண்ணத்தை விட்டால் மனோஜயம்:-
நம் அறியாமையான! அதாவது நம் அஞ்ஞானத்தாலான! அதாவது நம் கவனக்குறைவான! அஹங்கார. மமகாரத்தினால், மனோவிருத்தியும்! த்வைத விருத்தியும்! உண்டாகும். அஹங்கார, மமகாரத்தை விட்ட, மறு க்ஷணம், த்வைத விருத்தி மறையும்! நாமரூபம் மறையும்! மனோஜயம் உண்டாகும்!

(2) குற்றம் குறை! பேதம்! விருப்பு வெறுப்பு! விட்டால் மனோஜயம்:- முற்கவனசக்தியும்! தற்காப்பு சக்தியும்! விட்டால், மேலே கூறிய மூன்றும் விஹிதமாகும்! அங்கு தற்கவனம் தானே உண்டாகும்! இந்த தற்கவனத்தால், மனோஜயம் உண்டாகும்!

(3) எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையது! எல்லாம் உனதே! என்ற சர்வார்ப்பணத்தால், மனோஜயம் உண்டாகும்:- எல்லா பொருளும், ஸ்ரீ பகவானுடையதே! எல்லா செயலும், ஸ்ரீ பகவானுடையதே! அவனன்றி அணுவும் அசையாது! என்பது சத்தியமானால், அஹங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்! அபிமானம்! உடைமை! உரிமை! அவமானம், [illegible], [illegible], வட்டை, வெட்கம், அடியோடு நாசமாகும். இவைகள் நாசமானால், மனோஜயம் உண்டாகும்!




(8)


துள்ளல்:- துள்ளிய மாடு பொதி சுமக்கும். அதாவது கவனக் குறைவால் இன்பத்தில் துள்ளும் ஜீவன் புண்ணியபாப சுமையை சுமக்கும்! அது ஜனன மரணமாக முடியும்!

(4) ஆனந்த நடனம் செய்கிறது:— மனோநிலையில் இன்பம் என்றும், துன்பம் என்றும், இவ்விரண்டும், ஒன்றே என்றும் உணர வேண்டும். அறிவு நிலையில், ஆனந்தம் என்றும், அது பேரானந்தம் என்றும், பேரறிவு நிலையில், பிரம்மானந்தம் என்றும், உணர வேண்டும்! மனோநிலை இன்பதுன்பமானது, "துள்ளல்" இது குணதோஷ வெறியாட்டம் என்றும், இது "கலி" தோஷத் துள்ளல் என்றும், அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்வர். அறிவு நிலை ஆனந்தம் என்பது "பக்தியின்" நிலையில், பரவச ஆனந்தம் என்றும், (இது பாதகமில்) பேரறிவு நிலை, ஆனந்தமானது, அந்த ஒன்றை உணர்ந்த நிலையில், நர்த்தனம் என்ற "நடனம்" பிரம்மானந்த, "பித்தன்" நிலை ஆகும் என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்வர். இன்பதுன்ப துள்ளலான அஞ்ஞானம் ஆகும்! ஞானநர்த்தனம் என்பது, அநுபவ நிலையில், மனம் நாசமாகி (மோக்ஷமாகி) மனோஜயம், பெற்றவர்களுடையதாகும்!

(இது ஆனந்த நர்த்தனம்)




(5) அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு:—
மனம்! புத்தி! சித்தம்! வசப்பட்டால் "நாமம்" ஜகஜீவ, தோற்ற பொருள்கள் தோற்றும்.
மனம்! புத்தி! சித்தம்! "நம்" வசமானால், நாம ரூப
அவர் இயக்கமாகவும்
ஜகஜீவ தோற்றங்கள் அனைத்தும் ஸ்ரீபகவானுடை
யதாகவும், அவன் இருமையினால் அவனே நாம்
ஆகவும், நாமே அவனாகவும், ஆனநிலையில், மேலே
சொல்லிய அனைத்தும் "புதுமை"களின் ஒரே
சீரான இயக்கமாகவும், மறு "க்ஷணம்"
அவனும் ஸ்ரீபகவானும் நாமும், பரமாத்ம
ஜீவாத்ம ஐக்கிய நிலையில், "அதுவே"
நாமாகவும், "நாமே" அதுவாகவும், ஆனநிலையில்,
அறிவாகிய ஆன்மாவும் நாமும், மேலாகிய
பரமான்மாவும், பரப்பிரம்மமும்,
ஆனநிலையில், மனோஜயம் பெற்று,
பிரம்மானந்தமாகவே இருப்போம்!



(6) ஆன்மாவில் கற்பிதமாய், காண்பதுவே நாம ரூப, ஜகத் ஜீவ, தோற்ற சொரூபங்கள் ஆகும்:—
ஆன்மாவின் கற்பிதம் என்றால்; ஆன்மா அசங்கன் (அசை வற்றவன்) என்பதே ஸத்தியம். ஆகவே ஆன்மாவான் கற்பிதமல்ல.


ஆன்மாவே "ஸத்" ஸத்தே "ஸித்"! ஸித்தே மனம்! புத்தி **சித்தம்**! (இதை மனம் என்றே வைத்துக் கொள்வோம்)

இம்மனமே கற்பனையே, நாம ரூப ஜகத் ஜீவ உறவு! சுற்றம்! நட்பு! இவற்றின் சொந்த "**பந்தம்**" ஆகும்! இப்படி இந்த மனமானது, சொந்த பந்த பாசத்தால் கற்பனை செய்த தோற்றங்களே நாம ரூப ஜகத் ஜீவ, தோற்றங்கள் ஆகும். இவை அனைத்தும், மனமாகிய பரம்! என்றும்; பரமாகிய மனமே! என்றும், ஆன்மாவே பரம் என்றும், பரமே ஆன்மா! என்றும். ஆகவே நம் ஆன்மாவை, இந்த மனமானது, நாமரூபமாக கற்பனை செய்ததால், ஜகத்தோற்றம் தெரிகிறதென்று, உணர்ந்து விட்டால், மனம் இறந்து, மனோஜயம் பெறலாம்.



(11)

(7) பந்தம் இல்லாத தன்மையால், ஜீவன் முக்தி இல்லை,
ஜீவன் முக்தியே, இல்லாத தன்மையால் பந்தம் என ஒன்று இல்லவே இல்லை!
இயற்கையாகிய (மண், மலை, ஜலம், தாவரங்கள்) ஜகத்தை
செயற்கையாக்கியது, அதாவது வீடு, வாசல், சொத்து, பணம்,
அனுபவ பொருள் அனைத்தும், (தேவை ஆசை & ஆசை தேவை)
என ஆக்கிக் கொண்டது இந்த மாயா மனமாகும்!
இப்படி "பந்தபாச" வலையை, விரிக்கதும் இந்த
மனமே! இந்த பந்தபாசம் வேண்டாம் என சாதனை செய்து
"ஜீவன் முக்தியை" வேண்டியதும் மனமே.
பந்தம் உண்டானால்தானே முக்தி வேண்டும்? இதை
"அறிவு" பூர்வமாக உணர்ந்து, நாம் நாமாகவே,
(ஆத்மா என்ற பர சொரூபமாகவே) இருக்கும் போது
பந்தம் "எப்படி" வரும்? "மோக்ஷம்"
ஏன் வேண்டும்? என் அகமாகவே, சும்மாவே இருக்க
பழகி, அனுபவம் ஸ்வயமாகவே பெற்று விட்டால்,
அதுவே மனோஜயம் ஆகும்! அதுவே பந்தமும்
மோக்ஷமும், இல்லா பிரம்மானந்தம் ஆகும்!





(8) நிஷ்காம்ய கர்மா வினால், நிஷ்காம்ய பக்தி!
நிஷ்காம்ய பக்தியால், ஜீவன் அழிப்பு!
ஜீவ அழிப்பினால், ஜீவன் முக்தி! :-
கர்மாவை நான் என்றும் எனது என செய்தால், கர்மா
வின் தோஷமும், அதனால் ஜன்மமரணமும், உண்டாகும்.
கர்மாவை நீ, உன்னால், உனது, என செய்தால் கர்மா
வின், தோஷம் நிவர்த்தியும், மறுபிறப்பும் நீங்கும்!
கர்மாவின் பிடிப்பில்லாத தன்மையால், அங்கு
ஸ்ரீ பகவான், ஒருவனே மிஞ்சுவான். அங்கு அவனே
நானாகும் போது, எப்பலனும் இராது! இருக்கவியலாது
அவனே நானாவதே நாம் ஸ்ரீ பகவானாகும் நிலை! அங்கு
ஸ்ரீ பகவானே நானாகும் போது, "ஜீவன்" நாமும் அல்ல!
என்பது சத்தியமாகும். அங்கு ஜீவத் தன்மை
அழிந்த தன்மையால், மனம் பாரம் அற்றதாகிவிடுகிறது
பாரம் அற்ற நிலையில், மனம் அறிவாகிவிடுகிறது.
அறிவாகிய மனம், அடுத்த விநாடி, அது ஆகிவிடும்.
அது ஆகும் போது, அது பேரறிவாகும். அங்கு மனம்
மறைந்ததாகி, அதுவே நாம், நாமே, அது, என ஆகும்போது
அதுவே மனோஜயம், ஆகும் நிலையாகும்!



(13)

இ


எதிர்:- வாக்கும், செய்கையும், நாமரூப த்திரையில் தோற்றுவது.
புதிர்:- அப்படி தோற்றுவதில், அதன் உண்மையை இன்னதென, உரை வொட்டாமல் மனத்திரை மறைப்பது.
(நேர்த்த கேர்க்க வாக்கிலவகுங்குழப்பம்)

இந்த நாமரூபஜகம், எதிரும் & புதிருமாக, தோற்றுவதால் "நமக்கு" அன்னியமாய், உலகம் தோற்றுகிறது. இது "ஸித்தாகிய" சிக்கலின், விவகாரமேயன்றி வேறொன்றுமில்லை!

எதிரும் புதிரும் என்றால், மனம் "மோதுவது" ஆகும். மனம் எப்படி மோதும் எனக் கேட்கலாம்? மனம் படைத்த இந்த மனித இனம் மட்டும், ஒருவருடன் ஒருவர் மோதுவதாகும்! இதை அபிப்பிராய "பேதம்" எனச் சொல்லலாம்.

காரணம்:- ஒருவர் சொல்வதையோ! செய்வதையோ ஒருவர் ஏற்காததாகும். இம்மாற்றம், "வெறி"யால் நிகழ்வதாகும்! ஒவ்வொருவரும் (ஆணோ பெண்ணோ) பேசுவதும், செய்வதும், அவரவர் வினையை, செய்து முடிப்பதற்கே யாகும்! இதில் ஒருவர், ஒருவருக்கு வாக்கை கொடுப்பதோ! வாங்குவதோ! பொருளை கொடுப்பதோ! வாங்குவதோ! அவரவர் நிவிர்த்திக்கத் தக்கபடி, பரிமாற்றம் செய்து,

(14)




கொள்கின்றனர், என்பதே உண்மை! அப்படி பரிமாற்றம் செய்யும் போது, அவ்விருவரும், பொறுமையையும், நிதானத்தையும் (பொறுமை என்றால், இறை ஒரு உணர்வோடு இயற்றுதல் / நிதானம் என்றால்; நி + தானம் = நிதானம், அதாவது உன்னையே சர்வார்ப்பணமாக ஸ்ரீபகவானுக்கு அர்ப்பித்தல்) கையாண்டார்களேயானால், ஏற்றுவந்த, வினைமட்டுமே முடியும்! வேறு வினை தொடராது! இது இக்கவியால், முடியாத காரியமென ஆகிவிட்டது. இது "**அவசரயுகம்**" ஆகும்! இப்படி அவசரத்தில், ஈடுபடுவதால், இரண்டு நஷ்டம் உண்டாகிறது.

(1) அவசரம் :- அவம் + சரம் = அவசரம்! அவம் என்றால் வீண் / சரம் என்றால், சுவாசம் என்ற பிராணன்! அதாவது பிராணன், வீணே வெளியேற்றப்படுகிறது! (வெளியேறப்படுவதால்)

(2) அவசரம் :- நிலை தடுமாற்றத்தால், பேசுவதையும் செய்வதையும், நிதானமற்று செய்து விடுகின்றனர்

காரணம் :- "**வேகம்! ஆத்திரம்! ஆவேசம்!**"



இம்மாற்றமும்
ஏமாற்றமும்
எதிர்பார்ப்பால்
விளைவதாமே.

புதிர் :- மாற்றத்தினால் வரும் ஏமாற்றம் ஆமே.

"பயப்பு" இவைகளால், உந்தப்பட்டு, ஏறுக்குமாறாக நடைபெறுவது, "புதிராக" முடிந்து விடுகிறது. இதனை அக்கர்மாவும் முடிவுற்று, நிறைவு பெறுவதும் இல்லை! அத்தருமாற்றத்தால், புதிய தேவையற்ற கர்மாவும், பெருகிக் கொள்கிறது. இத்தருமாற்றத்திற்கு, ஸ்ரீ பகவானும் பொறுப்பாக மாட்டான்! உன் "மனமே" பொறுப்பாகும்!

கேள்வி :- எல்லாம் அவன் செயல் என்றால், இம்மனதின் செயலும், அவனுடையது தானே?

பதில் :- அவனுடையது தான். இதையாம் ஒப்புக் கொள்கிறோம். அம்மனமும், முழுமையாக அவனைச் சார்ந்திருக்க வேண்டுமே?

கேள்வி :- எல்லாம் அவன் செயல் என்றதனால், ஒப்புக் கொடுத்து விட்டோமே! பின் அவனே, அதைக் கவனித்துக் கொள்ளலாமே?

பதில் :- அவன் தான் கவனித்துக் கொள்கிறான்! அவன் தான் நடத்துகிறான்! அவனே இன்பதுன்பமாக சுவைக்கிறான், என வைத்துக் கொள்! எல்லாம் அவனே என்றால், இக்கேள்வி எவருடையது?



எல்லாம் அவனே என்றால் உனக்கு இருப்பு இல்லை. உனக்கு இருப்பு தோன்றுவது எல்லாம் அஹந்தையே. அந்த அஹந்தையின்மையும் இக்கேள்விக்கு காரணமாகிறது! அஹந்தை அழிந்தால் இக்கேள்வியும் இராது இருக்க இயலாது.


கேள்வி:- இக்கேள்வியையும், அவனுடையதுதான் எனச் சொன்னாலும், பொருந்தாதுதானே? அவன் அவனே கேட்க மாட்டான்! கேட்க இயலாது. அப்படியானால், இக்கேள்வி எவருடையது?

பதில்:- நீயே கவனித்துச் சொல். எல்லாம் அவன் செயல் என்னும் போது, அவன் கேட்க மாட்டான் என்பதும், கேட்க இயலாது என்பதும் தெரிந்ததே. இக்கேள்வி, எவருடையது என்பதை "நீதான்" சொல்ல முடியும்?

கேள்வி:- இது எம்முடைய, மனதின் "கேள்வி" என உணர்கிறோம்! எதிரும் புதிருமாக, போராடுவதும் எம் மனமே எனவும், விளங்குகிறது! ஆனால் இம் மனமும், ஸ்ரீ பகவானுடையதுதானே? இம்மனதை, அவன் ஏன் நேர் கட்டுகிறான், அடக்கி வைக்கக் கூடாது? அவனால் முடியுமே?

பதில்:- அவனால் முடியும். மனதை அடக்கட்டும்! அடக்காமல் போகட்டும்! அதை விடு! இப்போ "நீயார்?"

கேள்வி:- யாம் அவனே! அவனேயாம்!!



பதில் :- அவனே நீயாகவும்! நீயே அவனாகவும்!
இருக்கும் பக்ஷத்தில், உன் சொரூபம் என்ன?

கேள்வி :- (சற்று ஆழ்ந்து சிந்திக்கிறான்) யாம் ஆனந்த சொரூபமே!
பதில் :- நீ ஆனந்த சொரூபமென்றால், இந்த எதிரும் புதிரும் ஏது? இவை உண்டானால், கேள்வி உனக்கேது?
கேள்வி :- ஆமாம்! எமக்கு எதிரும் புதிரும், இடையாதுதான். இக்கேள்வியும், தேவையில்லைதான். அப்படியானால், இந்த எதிரும் புதிரும் தோன்றுகிறதே? இக்கேள்வியும் தோன்றுகிறதே! அதன் இன்ப துன்பமும், தோன்றுகிறதே? இதன் காரணம் என்ன? இது எப்படி வந்தது?
பதில் :- (சிரித்தாய்!) மாயா மனதின், போராட்டத்தை "ஆன்மாவாகிய" (ஸ்ரீமக வாருகிய) உன்மேல் ஏன் வலிய சூட்டிக் கொள்கிறாய்? "நீயோ ஆனந்தவடிவம்! உன் உடலோ
(உடல் உன்னுடையதல்ல. அது எண்ணத்தால் வந்தது. மெய்க்கு கொடுக்கும், பொய்யான விளக்கமே இது.)"

(18)




பிணம் சுடும் தடி :—
பிணத்தை சுடுகாட்டு
புலையன் சுடும் போது
ஓர் தடியைப் பயன்படுத்
துவான். பிணம் வெந்து
முடியும் போது அத்தடியையும்
பிணம் மேலே போட்டுவிடுவான். அதுவும் சாம்பல்
ஆகிவிடும். மனமும் அதேபோல் ஞானாக்னியால்
முடிவுறும்!

இன்பதுன்ப "துக்கபடிவம்!"
அவ்வுடல், அதன் வினைக்கேற்ப, ஆட்டிவைக்கும்
"மாயாமனமும்" உன்றுடைய கவலை!
பிணம் சுடும் தடி போல, உன் உடலோடும்
மனமும், இயக்கம் அற்று இவ்வாறு போகும்!
அம்மனதை "நீ ஆட்டாமல்"
அம்மனதால் "நீ என் ஆட்டப்" படுகிறாய்??

கேள்வி :— புரியவில்லையே பாபா? யாம் மனதை ஆட்டாமல் அம்மனதால், ஆட்டப்படுகிறோம் என்று, எதனால், இப்படி சொல்கிறீர்கள்?

பதில் :- நாமெல்லாம் பொருள்களை "எனது" என, சொந்தம் கொண்டாடுவது மனமா? ஆத்மாவா?

கேள்வி :- நன்கு சிந்தித்தால் மனம் தான்!
ஆனாலும், ஆத்மாவும், சம்பந்தம் கொண்டது போல், தோற்றுகிறதே!



பதில் :— எல்லாமே நாம ரூப பாவசம் பந்தம் ஆகும்! அறிவீர்களோ! ஒளிமயமானவன். சூட்சும சொரூபமானவன் விளக்க முடியாதவன். என பொருள் கொள்ள வேண்டும்!

பதில் :— எப்படி அதை சொல்ல முடிகிறது?

கேள்வி :— முதலில் எண்ணுகிறோம்! எண்ணியதை கேட்கிறோம்! கேட்டதை வாங்குகிறோம்! வாங்கியதை அனுபவிக்கிறோம். இதில் எம் ஆத்மாவும், சம்பந்தம் கொண்டது போல் உணர்கிறோம்

பதில் :— எண்ணியது மனம்! கேட்டது வாக்கு! வாங்கியதும், (வாங்கி) அனுபவிப்பதும், நீ வாங்கும் பாவமும்! வாங்கும் பாவம் பொருளும் (எல்லாமே பாவ சம்பந்தம் ஆகும்) இதில் நீ எங்கே சம்பந்தம் கொள்கிறாய்?

ஒளிமய சூட்சும சம்பந்தமான


கேள்வி :— ஆமாம்! இவை மூன்றிலும், யாம் இல்லை தான்?

பின்பு, எங்கே எப்படி இருக்கிறோம்?


பதில் :— நீ அதை மறந்தவனாய்! ஆதை மறந்தவனாய்! நாசமறந்தவனாய்! ஸ்வயம் ஜோதியாய் நீ இருக்கிறாய்!

கேள்வி :— அப்படி யானால், எம்மை, யாம் காண முடியவில்லையே காரணம் என்ன?

பதில் :— உன்னை நீயே, எப்படி காண முடியும்? உனக்கு அன்னியமாய் ஒன்று இருந்தால், அது உன் காணும்!



நீயும் அதைக்காணமுடியும்! இனி உனக்கு, அன்னியமாய் தோற்றிய தெய்வமும், உன் "மனமும்"! அதன் கற்பனை "நாமரூப ஜகமுங்கூட! அம்மனமோ, மாயாவின் மகளாம்! அம்மாயாவோ, உன் நிழல் ஆகும்! அம்மாயாவின் திருஷ்டி, ஜகம் ஆகும்! அச்ஜகத்தின் நாமரூபம், உன் மனோமய, கற்பனையாகும்! இப்படியாகும்போது, அம்மாயாவோ! அம்மனமோ! "உனக்கு" அன்னியமாய் இருக்கிறதா? அப்படியானால் இவ்வாறு, கற்பனையில் நீ தன்மயமாய் இருக்கிறாய்! ஆகவே இம்மனமே, "எதிரும் புதிருமாக" நாமரூப, தோற்றத்தை, உண்டு பண்ணிக் கொண்டு, நான், என்னுடையது என, சொந்தம் பந்தம் கொண்டாடி, விளையாடுகிறது. ஆனால் அதுவும் உனக்கு அன்னியமாயில்லை எனத் தெரிக!



இப்படி உனக்கு, அன்னியமாய், தோன்றும் தோற்றம் எல்லாம், உன் "ஸ்ரீ" சொரூபமான "சித்தத்தின் (மனதின்)" செயல் ஆகும் என உணர்க. இதன் உண்மை யாது எனில்?

ஜகமாக தோற்றுவது "மாயாவின்" செயல். அதில் நாம ரூபமாக தோற்றம் பண்ணுவது அம் மாயாவின் "மனதின்" செயல் ஆகும்.

அந்த நாம ரூபங்கள், உனக்கு எனக்கு என போட்டி போட்டுக் கொண்டு, போராட்டம் பண்ணி, எதிரும் புதிருமாக, ஆடிக்கழிப்பது, அம் மனதின் "தோஷ" குணங்கள் ஆகும். அதை விலக்குவது ஞானமார்க்கமே.

அம் மனதை, சர்வார்ப்பணத்திலும், பிரம்மார்ப்பணத்திலும் கரைத்து, மயமாக்கிக் கொண்டால், அது மனோஜயம் ஆகும்.



(22)

**சம் :—**
சம்பவம்!
சம்போஹம்!!


**பந்தம் :—**
உறவு, சுற்றம், நட்பு இவைகளே உனக்கு எனக்கு என, போட்டி போட்டு, அனுபவிப்பது!

(10)

(A) "**மன**" எண்ணத்தின் பொருளும் இல்லை!
(B) "**புத்தியின்**" கற்பனையின் " " !
(C) "**சித்தத்தின்**" உறுதியிலும் " " !
(D) "**போகங்கள்**" விராகமும் " " !
(E) பிரம்மமே இவை அனைத்துமாய் இருக்கிறது!

(A) மனஎண்ணம் :- நாமரூப **சம்பந்த** பொருளும் & உறவு, சுற்றம், நட்பும் ஆகும்!
சம்பந்தம் :- "**சம்**" = இணைவதும் & பிணைவதும்!
**பந்தம்** = எனது! உனது! உறவு கொண்டாடி, பற்றும் பாசத்தாலும் "**உடைமை & உரிமை**" கொண்டாடுவதாகும்!

(B) புத்தியின் கற்பனை :- மேலே கூறிய வற்றில், "**குணதோஷங்களை**" அனுபவிப்பதற்கு ஏற்றவாறு புத்தி, சுவை அனுபவத்திற்கு தக்கபடி,





"மாறி மாறி" கற்பனை செய்வதாலே!

இ) சித்தத்தின் உறுதி:— முன்கூறிய, மனமய கற்பனை, நாமரூபங்களை, அசைக்க முடியாத, நம்பிக்கையுடன், "உறுதி" செய்து, இவைகள் இல்லாமல், உலகம் இல்லை என்றும், இவைகளை அனுபவிக்காமல், "வாழ்க்கை" இல்லை என்றும், ஸம்ஸார சாகரத்தை (கடல் அலை போல், சஞ்சல அசைவை) உண்டுபண்ணுவது ஆகும்!

ஈ) வாக்கால் விளக்கம்:— மேலே கூறிய மூன்றின், நிலையிலும், பொய்மையையே, உண்மையாக காட்டும், "கற்பனை தோற்ற வடிவங்களை" "வாக்காகவும்" அதே வாக்கை, பல வடிவங்களில் "வாக்கால் பேசி, காதால் கேட்டு, "வரியாகவும்" காதால் கேட்டு, வாக்கால் பேசி, பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!



இல்லாத உவமைக்கு "இருப்பை" கொடுப்பது, "சரி" வாக்காகும்! சரிவாக்கு என்றால், பின்னிப் பிணைந்து! ஒட்டி உறவாடி! உனக்கு நான்! எனக்கு நீ! என்றும்; "நான்" இல்லாமல், உனக்கு வாழ்வு இல்லை என்றும்; நீ இல்லாமல் "எனக்கு" வாழ்வு இல்லை என்றும்; இன்பதுன்பத்தையே, சுவைத்து சுவைத்து அதிலேயே இருந்து! ஆனந்தத்தை "மறந்து" அலையப் பண்ணுவது வாக்காகும்!

(E) மேலே கூறிய நான்குமே, காலாதீத "பரமே" அகண்டமாய், இருக்கிறது என்றும்; எல்லாமே, முன்னாகிய பரத்திற்கு, அந்நியமில்லை என, தெளிந்து எல்லாம், "மண்ணே" / மண்ணே "எல்லாம்"

இதை முறைப்படி, ஸ்ரீபகவானுடையதாக இருந்தாலும், அந்த ஸ்ரீபகவானும்! ஆத்மாவாகிய நானும்! பரமாகிய அதுவும்! தத்துவம் அஸி என்ற நிலையாய், ஒன்றே என, உணர்ந்தால் அதுவே மனோஜயம் ஆகும்!



11


# "பொறுமையின் பெருமை"

முன்பு சொன்ன கதைதான்! திரும்பவும் ஏன் சொல்கிறேன் என்றால், எறும்பு ஊர கல்லும் தேயும்! என்றபடியும், மெல்லப் பாயும் ஜலம், பூமி குளிரும்! என்றபடியும், சொல்பவனுக்கும், பொறுமை வேண்டும்! அதைக் கேட்பவனுக்கும், அஸாத்திய பொறுமை வேண்டும்! என்றும், அப்போது தான், பொறுமையின் பெருமையை உணர முடியும் என்றும், ஸ்ரீமஹான்கள் கூறுவர்.

இந்தக்கதையை, கருத்துடன் உணரவும்!

## "ரிபு & நிதாகன்" சம்பவம்!

ஓர் காட்டு அரசன், ஓர் யானையின் மேல், அம்பாரி வைத்து (ஆஸனம் இட்டு) அதன் மேல், அமர்ந்த வண்ணம், பவனி போகிறான். கிராம வாசிகள், கண்டு களிக்கின்றனர். அக்காட்சியை, நம் நிதாகனும், ஓர் ஓரமாக நின்று, கண்டு களிக்கிறான்.






அதுசமயம், ஸ்ரீ மஹான் ரிபு மஹாத்மா, அங்கு வருகிறார். அவர் அரசன் யானை மேல் போவதையும், ஜனங்கள், கண்டு ஆனந்திப்பதையும்; தம் உத்தம சிஷ்யன், நிதாகனும், கண்டு ஆனந்திப்பதையும், கவனித்தார்; ஸ்ரீ குருதேவர்! மெதுவாக, கூட்டத்தை விலக்கிக் கொண்டு, நிதாகன் சமீபமாக வந்து நின்று நிதாகன், தன்னைப் பார்க்கும் நிலைக்கு, அவன் தோளை தட்டினார் ஸ்ரீ குருதேவர்!

நிதாகன்:— என்னையா இது? யாரையா நீர்? என்ன வேணும் உமக்கு?

குருதேவர்:— கொழுந்தே! எம்மை மன்னிக்கவும்! உனக்கு சிரமம் கொடுத்து விட்டோம்!

நிதாகன்:— புறக்காட்சி! காட்சியின் மயக்கம்!

அக்காட்சியான, மயக்கத்தினூடு ஏற்பட்ட ஓர் "நடை" ரஸனையின் "மோஹம்!" இவை களிப்பு, சிக்கியிருந்த நிதாகன் ஆத்மிகன் வேகத்திலே தம் குருதேவரை மறந்தான், என்று சொல்வதை விட அத்தனை தோஷம், அவன் அறிவுக்கண்ணை, மறைத்துவிட்டு.



"மனக்" கண்கள், கொண்டு நோக்கினேன். வேகமுடன்

மன்னிப்பது இருக்கட்டும்! உமக்கென்ன வேண்டும் இப்போ?

ஸத்குரு:- பேச்சில் வேகம் வேண்டாம்! ஆத்திரம் வேண்டாம் கடுமை வேண்டாம்! பொறுமையுடன் பேசு.


நிதாகன்:- சரி ஐயா! சரி ஐயா! உம் ஹிதோபதேசம், இருக்கட்டும். உமக்கு என்ன வேண்டும் இப்போது?

ஸத்குரு:- கொடுந்தே! இன்னமும், வேகம் தொலையவில்லையே. இப்படி இருந்தால், எம் விளக்கத்திற்கு, எப்படி நல்ல பதில் கிடைக்கும்?

நிதாகன்:- சரி! சரி! சரி! நிதானமாகவே பேசுகிறேன், என்ன விளக்கம் வேண்டும்?

ஸத்குரு:- வேறொன்றுமில்லை! இங்கே ஏன், இப்படி எல்லோரும் கூட்டமாக நிற்கிறார்? என்ன விசேஷம்? ஏதேனும் காட்சி உண்டோ?

நிதாகன்:- ஆமாமையா! ஓர் யானை மேல், அம்பாரி வைத்து, அதன் மேல் ஓர் அரசன், அமர்ந்து பவனி போகிறான். அவ்வித்தான், இச் ஜனங்கள், கண்டு களிக்கின்றனர். அடியேனும், பார்க்கிறேன். நீர் வேண்டுமானால் பாரும். தேவை இல்லை என்றால், உம் வழியைப் பார்த்துச் செல்லும். தொணதொணத்து, எம்மை தொந்தரவு செய்யாதேயும்!



ஸ்ரீகுரு:— உனக்கு இத்தனை, சிரமம் கொடுப்பதற்கு, எம்மை மன்னித்து விடு! யாமோ வயதானவன். ஓர் கிழவன். சற்று புரியும்படி எமக்கு சொல். யானை எங்கே? அம்பாரி எங்கே? அரசன் எங்கே? இந்த வயதான கிழவன், புரியும் நிலைக்கு, சற்று விளக்கம் கொடு கொழுந்தே!

நிதாகன்:— (வலக்கரத்தால் சுட்டிக்காட்டினான்) ஐயா பெரியவரே! அதோ "யானை"! "அந்த யானை மேல், "அம்பாரி" (ஆசனம்) அந்த அம்பாரி மேல், "அரசன்"! இப்போது பாரும். பார்த்து விட்டு, உம் வழியே போகலாம்! அந்த நிதாகனுடைய பேச்சு, பேச்சாக இருந்தாலும், அவன் கவனம் எல்லாம், அவன் குறிப்பிட்ட, அம்மூன்றிலேயே இருந்தது!

கவனம்:— "நாமரூபஜக" சொரூபம். நாமரூபத்தை, விடமுடியாமல், அவன் மனம் சிக்கிக் கொண்ட தன்மையால், பொறுமை அவனிடம் நிலைக்கவில்லை. (நாமரூப ஜகத்தை விட்டால் பொறுமை நிலைபெறும்.)





ஆனால் குருதேவரோ, "அன்பின்" சொரூபம்!
"பொறுமையின்" ஆசனம்!

குருதேவர்:- கொழுந்தே! விளங்கவில்லையே! சற்று இந்த கிழத்துக்கு, விளங்கும்படி சொல்லேன்? யானை! அம்பாரி! அரசன்! மேல்! கீழ்! என உன்வாக்கு வருகிறது! விளக்கம் வரவில்லையே!

நிதாகன்:— என்னய்யா இது? ஒரு யானையை பார்க்கவும், கண்ணாடி தேவையா? நீர் குருவே இல்லை! நன்றுகெட்டதான் இருக்கிறீர். சற்று இப்படி முன்னால் வாரும். இனி பாரும். இப்போ தெரிகிறதா? முதலில் யானையை பாரும் அப்புறம் அரசனைப் பார்க்கலாம். என்றான் (ஆத்திரத்தை உள் அடக்கிக் கொண்டே)


குருதேவர்:- கொழுந்தே! ஆத்திரமாக, உன் வாக்கு வருவதால், தெளிவு பெறமுடியவில்லை. சற்று அமைதியாக, பதில் தந்தால் தேவலை. எது யானை?

நிதாகன்: (பொறுமை இழந்தான். இன்று இந்த கிழத்திடம், மாட்டிக் கொண்டோமே, என தன்னையே நொந்து கொண்டான். உதட்டை கடித்தது! கண் சிவந்தது! உடல் உதறியது! அவர் பிடரியில் கையை வைத்து, நேராக நிமிர்த்தினான்)



நிதாகன்:- ஐயா பெரியவரே! யாம் பொறுமையுடன் நான் பேசுகிறோம். அமைதியாகத்தான் இருக்கிறோம். உமக்கு "வயதாகிவிட்டதால்!" எமக்கு பொறுமை இல்லை என சொல்கிறீர். பரவாயில்லை. இப்போது பாரும். யாம் கைகாட்டும் இடத்தில், யானை இருக்கிறது!

குருதேவர்:- ஓ ஓ ஓ கைகாட்டுகிறாயா? இது "உன்கையா?" நீ மேலே காட்டுகிறாயா? கீழே காட்டுகிறாயா? அங்கு யானை தெரியவில்லையே! நீ "ஏதை" யானை என்கிறாய்? "ஏதை" அரசன் என்கிறாய்? நிதாகன் பொறுமை இழந்தான்! செய்வது அறியாது திகைத்தான். அந்த "வேகத்தில்" என்ன செய்யப் போகிறோம்? என்ன செய்கிறோம்? இதன் விளைவு என்ன? நாம் எப்படி இருக்கிறோம்? இதை "கவனி? சரியா?" என எண்ணுவதை இழந்தான்.



ஆத்திரம் அறிவு நாசம்! என்பது சரியாகி விடுது

சொல்லில் விளங்காதது, செயலில் தான் விளங்கும்!

"**விளக்க முடியும்**" என முணங்கிக் கொண்டே,

"**வேகத்தின்**" காரணமாக, நம் ஸ்ரீ குருதேவரையே,

"**குரு**" என உணராமல், அவர் சிரசின், ஜடா மகுடத்தை, பற்றி இழுத்து, பலவந்தமாக, மண்டியிட்டு குனிய வைத்து,

சிறு குழந்தைகள், தம் அப்பா விடம், யானை விளையாட்டு விளையாடுவது போல், ஓர் காரியம் பண்ணினேன்.

ஸ்ரீ குருதேவர், முதுகில் ஏறி அமர்ந்து, அவருடைய

பெருமை மிக்க, **ஜடா மகுடத்தை**!

நம் இடக்கரத்தால், பற்றிய வண்ணம், கம்பீரமாக

வலக்கரத்தை நீட்டி, ஐயா பெரியவரே!

இப்போது தெரிகிறதா ???????????????




(32)

**அஹங்காரம்**

மேல் ஓங்கும்போது,
அன்பு பணியத்தான்
செய்யும். அன்பின்
பார்வையால் காலக்
கிரமத்தில் அஹங்காரம்
அழிந்து நாசமாகும்!
அன்பின் நிலை பணிவு! அஹங்காரத்தின் நிலை எழுச்சி!
பின் வீழ்ச்சி!!

"**யானைபோல் நீங்களே**" இருக்கிறீர்!
"**அரசன்போல் யாமேவே**"
இருக்கிறோம்! உம்முடைய "**மேல்**" வாகனமே,
எமக்கு "**அம்பாரி**" (ஆசனம்) ஆகும்!
என்றான் பாகன். நிலை தடுமாறியதால்
அஹங்காரம்! ஆதிக்கம்! அதிகாரம்! மேல்
ஏறியது போலும்??? இந்நிலையிலும் ஸ்ரீகுருதேவர்
முகம் சுளிக்கவில்லை! கண்டிப்பு தண்டிப்பு இல்லை!
ஆக்கிரம வேகம் இல்லை! பதட்டம் படபடப்பு இல்லை!
எந்த "**தோஷ**" குணங்களும், ஸ்ரீகுருதேவரிடம் இல்லை.
பொறுமை! சாந்தி! அமைதி! ஆனந்தம்! அருந்தவம்!!!
மண்டியிட்டிருந்த, ஸ்ரீ குருதேவரும், தம் உத்தம
மாணவனை, பொறுமையுடன், அமர்ந்த வண்ணம், தம்
தலையை, சாய்ந்த நிலையில், மேல் நோக்கி பார்த்த
வண்ணம்
"**அமைதி அடக்கம் பணிவு, கனிவு!**"





இவைகளுடன் இனிமையாக கேட்கிறார்:—

கொழுந்தே! வேகம் வேண்டாம்! ஆத்திரம் அவசரம் வேண்டாம்! படபடப்பு வேண்டாம்! கலக்க பயம் வேண்டாம்! எம்மீது கருணை காட்ட வேண்டும்! யாமோ ஓர் இயலாத கிழவன்! காதும் கொஞ்சம் மந்தம்! வயோதிகத்தால், பார்வையும் கொஞ்சம் குறைவு! ஒன்றும் விளங்காத, தன்மையுடையோன் நான், இப்படி உனக்கு அதிக சிரமமும் கொடுக்கிறேன். **மாறிமாறி** கேட்கிறேம். கொஞ்சம் எமக்கு விளங்க வைத்து விட்டாயானால், யாம் சென்றுவிடுவோம்.

"**யானை**" எது? அது எப்படி இருக்கிறது?

"**அம்பாரி**" எது? அது எதனால் எப்படி இருக்கிறது?

"**அரசன்**" என்பவன் யார்? அவன் எப்படி இருப்பான்?

மேலும் "**மேலே**" என்றும் "**கீழே**" என்றும்; இரு வார்த்தை சொல்கிறாய்! அதன் அர்த்தமும், விளங்கவில்லை. மேலே என்பதும், கீழே என்பதும், "**எப்படி**" இருக்கும்? அது ஓர் பொருளா? ஓர் இடமா? காலமா? உதாரணமா?



உ

(34)

தயை செய்து, இந்த எளியேனுடைய, இந்த பிறந்தநாளை
நிர்தாக்ஷிண்யமாக தள்ளி விடாமல், யாம் புரியும்
நிலைக்கு, சற்று விளக்கவுரையாக என,
இறைஞ்சி, கெஞ்சி, நா(வு) தழுதழுத்த குரலில், கேட்கிறார்
ஸ்ரீ குருதேவர்!

அப்போது தான், அப்பெரியவர், திருமுக மண்டலத்தை, சற்று கூர்ந்து, நோக்கினேன் நிதாகன்.

இங்கு ஓர் முக்கியம் என்னவென்றால்?


"ஸ்ரீ குரு" எந்த திரையும், போட்டு தம்மை மறைக்க வில்லை. அவர் "**மனமற்றவர்**!"
ஆகவே "**திரையற்றவர்**!" அல்லவா?

"**நிதாகனே**" மனத்திரையோடு கூடியவன்!

அத்திரை, எப்படி அமைந்திருக்கிறது என்றால்?

(A) யாம் இன்னாருடைய, மாணவன் (அப்படி யானால் மற்றவர்கள், எல்லாம் மாணவர்கள் இல்லையா?)

(B) யாம் அவருடைய, அணுக்கத் தொண்டன் (ஸத் சிஷ்யன்) (ஸ்ரீ குருதேவர் இப்பேதம் காண்பவரா?)



(35)

(C) யாமே நெருங்கலாம், பழக்கமும்! (தேவையுமே) செய்கிறோம்.
(ஸ்ரீகுருதேவர் காலத்திற்கு உட்பட்டவரா? விருப்பு வெறுப்பு உள்ளவரா?)

(D) நிறைய பாடம் கேட்டிருக்கிறோம். அதன் அனுபவமும், பெற்றுவிட்டோம்! (இது அஞ்ஞானத்தின் வெளி) மேலும் (கற்றது கைமண்ணளவு! கல்லாதது உலகளவு)

(E) ஸ்ரீகுருதேவர் எம்மீது, அதிக பிரியம், வைத்திருக்கிறார்! (இது மோகத்தால் வரும் தடுமாற்றம்!)

ஸ்ரீ பகவான் "இதயவாஸி"!

ஸ்ரீ ஸத்குரு "ஸர்வாந்தர்யாமி"!

முந்தையது சாட்சிபாவனை! பிந்தையது சர்வ சாட்சிபாவனை!

ஸ்ரீபகவானை ஓர் நிலையில், ஓர் கணக்கு போட்டு பார்க்கலாம்.

ஆனால் ஸ்ரீஸத்குருவோ, எக்கணக்கிலும் அடங்காதவர்.

ஆகவே இவ்விரண்டும் "அன்பில்" அடங்கும்.

உண்மையும் "தர்மம்" அடக்கிக்கொண்டு, உண்மையும் அன்பையும் அமைதியும் கருணையும் ஒன்றென, ஆக்கிக்கொள்ளும்.



36

எதிர்பார்ப்பே வியாபாரம். அவ் வியாபாரமே ஏமாற்றம். அந்த ஏமாற்றமே, மனத் தடுமாற்றம். அத் தடுமாற்றமே, வினையின் பெருக்கம். வினையின் பெருக்கமே, ஜனன மரணம்.

அப்பெரியவரின், திருமுக மண்டலத்தை சற்று "கூர்ர்ர்ர்ர்ந்து" நோக்கிய, மறு கணம், அவர் "மனத்திரை" பெரியமலை போன்ற, பஞ்சுப் பொதியில்! சிறிய நெருப்புப் பொறி, விழுந்தது போல், எல்லாமே சர்வநாசமாயின!

ஓர் சத்சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும் என்றால்? எல்லாம் நீயே! எல்லாம் உனதே! எல்லாம் உன்றன்! என்ற "துவைத சர்வார்ப்பணத்தில்" முழுமையாக கரைந்து அழிந்தவரை!!! எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது! என்ற "அத்வைத பிரம்மார்ப்பணத்தில்"! மனம் மறைந்தவரை!!! இருக்க வேணுமென்று, ஸ்ரீமஹான்கள், சொல்லக் கேள்விப்படுகிறோம். சர்வார்ப்பணத்தில் மனம் பாரம் குறைந்து குறைந்து லேசாகிவிடுகிறது. பிரம்மார்ப்பணத்தில் மனம் அழிந்து, மறைந்தாகி விடுகிறது.




ஸ்ரீ குரு தேவர் தம்மை
காட்டினாரா? அல்லது
ஸத்சிஷ்யன் கண்டானா?
காலம் கனிந்தது!
மனோ பக்குவமானது!!
அஞ்ஞான மனத்திரை அகன்றது!!!
ஸ்ரீ குரு தேவர் எப்பொழுதும் பிரத்யக்ஷ சொரூபமாவே

ஸத்குரு பாதத்தின் மேல், அமர்ந்த நிலையில், ஸத்குருவின் திவ்விய தேஜஸ், முகார விந்தத்தை ஒரு க்ஷணம் நோக்கினேன்! மறு க்ஷணம் நெருப்பில் விழுந்த புழு எனத் துடிதுடிக்கிறேன் (இதை மேலும் எழுத முடியவில்லை. அத்தியாயத்தை உடனே முடித்துக் கொண்டோம். மேலும் எழுத எத்தனித்தால், வேறு யாரும் இருக்க மாட்டோம்! இருக்க முடியாது!! இருக்க இயலாது!! இவ் பேதமையை மன்னிக்கவும். இனி அத்தியாயம் தொடர்கிறது)

ஒருவகையாக, தம் உத்தமமானவனை நிதானித்து, சமாதானம் பண்ணிவிட்டார் குருதேவர். நிதானம், தம் ஸ்ரீ குரு தேவர் மடியில் படுத்த வண்ணம், கண்களில் கண்ணீர், கொட்டிக் கொண்டிருக்க சொல்கிறேன்:

ஹே ஸத்குருவாரியா! ஸத்குரு தேவா! எத்தகைய அறியாமையின் சோதனை? எத்தகைய அபசாரம்? இதற்கு பிராயச்சித்தம் உண்டா? மன்னிப்புதான் உண்டா?

ஸத்குரு:- குழந்தே! நீ என்ன தப்பு செய்தாய்? நீ என்ன குற்றம் செய்தாய்? மன்னிப்பு யார் யாருக்கு கொடுப்பது? ஒன்றுமே நடக்கவே இல்லை! இது பதுமைகளின் ஆட்டம் தானே? உன்னுடைய (வினை), உன் மனம் இருந்து, ஆட்டி வைக்கிறது! வினை முடிந்த, எம் தாவத்தை அறிவாயா



(ஸ்ரீபகவான்) சரியாக ஓர் அணுவளவு பாடத்தில் நியமித்தும்,
இயங்கிக் கொண்டிருக்கிறது. எந்த அவமானது, ஓர்
"காரண" சரீரம்! உள்ளதுவமானது ஓர் "காரிய"
சரீரம்! காரணம் இல்லாமல், காரியம் இல்லை என்பதே
ஸத்தியம்! காரண சரீரத்தை இயக்கப்பட்ட அறிவு,
பொறுமை! அன்பு! கருணை! பணிவு! கனிவு! சாந்தி!
ஆனந்தம்! இவைகள் நம் "ஸ்வய அனுபவ"
மூலமாக, காரிய சரீரியாகிய, பக்குவ ஆன்மாக்களுக்கு,
உணர்த்துகிறான், அனுபவத்தை சாத்தியமாக்கி!
மேலே கூறிய, ஸத்வகுணத்தை, உன்னிடம் செலுத்துகிறான்
உன் அறியாமையின், தோஷ குணங்கள் அழியும்போதும்
கண்டிப்பு, தண்டிப்பு! ஏதுமாக மேலே கூறிய குணங்களால், உன்னிடம்
பாடம் நடத்துவார், உன் தோஷகுணங்களும், அழியும் வரை
பிள்ளைவாது, அழியாது! ஓர் உண்மை என்னவென்றால்
ஓர் ஸத்குரு, நம் சிஷ்யன், கிடைக்கிறது வேண்டும் என்ற,
எண்ணம் கொண்டாலே, "சிஷ்யன்" கிடைக்கிறவுடையும்
அந்த ஓர் எண்ணத்தால், அவரும் பந்தப்படுவார்



நிறை நிலை பெற்றவர்
சைதன்யமானது
(ஆத்ம ஒளியானது) (39)
நம்பும் பக்தியை ஆன்மா
வை கடைத்தேறுமே
யல்லாது, அவர் போதனை
கடைத்தேறிடுது என்பது ஸத்திய
போதனைகாவத்திற்குட்பட்டது. சாதனை காலாதீ
தமானது.


என்பதே ஸத்தியம். இது ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்
ஆனால் ஓர் ஸத்குரு, "அந்த ஒன்றைத்
தவிர" மற்றும் அனைத்திலும் எல்லாம் அடங்கும்
"நம்மை அழித்து"க் கொள்ள வேண்டும்!
அனைத்தையும் பூரணமாக
அழிய வேண்டும்.
இந்த நிலையில்தான், ஓர் ஸத்குரு "பரிபூரணத்துவம்"!
பெறுகிறார். அதாவது, அதுவாகவே பிரகாசிக்கிறார்.

(1) நிறைகுடம், தளும்பாது என்பது ஓர் "ஸத்குரு"!
குறைகுடம், கூத்தாடும் என்பது வித்வத்வம்,
அது சாமான்ய குரு ஆவர்! ஆவர்

(2) நிறைகுடம், பொங்கித் ததும்பும் என்பதும்

அதாவது நிலை கண்டு! இடம் கண்டு! பக்குவம் கொண்டு!

பர கருணையாக, பொங்கி வழியும் என்பது "பரகுரு"!
என ஸ்ரீ மஹான்கள், வாயிலாக அறிகிறோம்! ஆவர்.
இந்த ஸத்குருவே, அனுபவ முதிர்ச்சியால் பரகுரு ஆக முடியும்.
இவருடைய, வைப்ரேஷன் (ஆன்ம ஒளி) தான், ஓர்
ஸத்சிஷ்யனை கடைத்தேற்றும்.



(40)

ஒன்று தோன்றுவது அதிஷ்டானம்!
அந்த ஒன்று மற்றொன்றாய் தோன்றுவது ஆரோபம் ஆகும்!

இங்கு இவருடைய "போதனை" அவனுக்கு சாதனையாகாது. சாதனையாகும்.

இங்கு இவருடைய "சாதனையே" அவனுக்கு சாதனையாகும். போதனையும் ஆகும்.

இனி உன் காட்சியின், தன்மையை உணர்க!


குருதேவர்:- இங்கு உன் நாவக் கண்களால், கண்ட காட்சி என்ன?

நிதாகன்:- குருதேவா! யானை! யானை மேல் அம்பாரி! ஆஹா! அம்பாரியின் மேல், ஓர் அரசன்! இவைகளைக் காண, ஓர் ஜனக் கூட்டம்! இவைகளைக் காணும், நடுவில் "யாம் ஒருவன்"!

குருதேவர்:- கொடுத்தே! காணும் நீ ஒருவனே சத்தியம்! மற்றும் உன் கண்ணால் காணக் கூடிய அனைத்தும், "நாமரூபங்களும்" உன் மேல், ஏற்றப்பட்ட "ஆரோப" வடிவங்கள் ஆகும்.

நிதாகன்:- புரிய வில்லையே குருதேவா! யானை, அரசன் ஜனங்கள், இவைகள் எல்லாம், என் கண் முன், பிரத்தியட்சமாக, இருக்கின்றனர்! ஆடியாடி வருகின்றனர்! அதனால் ஏதோ ஒன்றை அனுபவிக்கின்றனர். அதை இன்பம் என சொல்கின்றனர்.





(41)

ஒன்றை ஒன்று தாங்கவில்லை. ஒன்றுடன் ஒன்று இணைகிறது. ஆகவே மேல்! கீழ்! பக்கம்! நடு! என பேதமான திசைகளோ! காலங்களோ! இல்லவேயில்லை! அப்படி சுட்டிக்காட்டுவது மனமே பேதமாகும்!

குருதேவர் :— அரசன் என்றும், யானை என்றும், ஜனங்கள் என்றும், மற்றும் எல்லா நாம ரூபங்களும் "மண்"தானே? அவை அனைத்தும் புண்ணியமாய "விண்"கூடுதானே? உள்ளிருக்கப்பட்ட சைதன்யம் "ஒன்று"தானே? இதில் மேல்! கீழ்! பக்கம்! நடு! என திசைகளையும், காலங்களையும், கூட்டம் அனைத்தும், வார்த்தையின் "மாயாஜாலங்கள்"! ஆகும்! இதில் மயங்கிய மாந்தர் அனைவரும், குணதோஷங்களில் சிக்கி ஜனனமரணம் எய்துகிறனர். இதில் மயங்காத, "ஸ்திரஞானி"! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே என பிரம்மானந்தமாக இருக்கிறான். ஆனால்? அறியாமையின் மாந்தர், மனம் வசம் அகப்பட்டு "உடைமையும் உரிமையும்" பாராட்டி, அகங்கார, அதிகார, ஆசைக்க, அபிமானங்களால்,



உ

உந்தப்பட்ட தன்மையால், மேலே சொன்ன, நாம ரூபங்கள் ஸத்தியம் என, பேசுகின்றனர். இதுவும் பேச்சளவே தவிர, உண்மையில்லை! இதன் உண்மையாவது


"சொற் பொருணோர் அனுபவமில்" என்று, எப்போதும், சும்மாவே இருந்து, ஸாந்தியாவாய் என்றேம். அதாவது,

சொல்லும் பொருளும் அனுவும் இல்லை! அதாவது,

சொல்லும் நாமாவும், காணும் பொருளும், இல்லை! அதாவது,


சொல்லால் (வார்த்தையால்) விளக்கும் நேரம் கூட அப் பொருள் இருப்பதில்லை! அதற்குள்ளாக,

அப் பொருள், "மாறி" விடுகிறது! "மறைந்து" விடுகிறது! இம்மாற்றத்தையும், மறைவையும், உண்மையை அறியாத மனம், ஓர் விருப்பியினால், தமோறாணை தோஷங்களால், புண்ணிய பாவங்கள், சேர்த்துக் கொண்டு, ஜனன மரணத்தை, உண்டுபண்ணுகிறது.




எல்லாம் மண் (43)
என்றால். அங்கு
பாரம்பரியம்? விகாரம் ஏது
ஒன்றுக்கொன்று உபா
தை ஏது? திசைகள்,
காலங்கள். வியாபாரம்,
சோகமே, வேகமே, சாகமே
ஏது? ஏது? ஏது? ஆனால்,
தோன்றுகிறதே என்றால். அனைத்தும் மறைபொருள்
ஆமோ யானால், வேறொன்றுமில்லை. இது சத்தியம்!

ஸ்ரீகுரு தேவர் சொன்னார்:— கொழுந்தே! நீ நடந்து கொண்ட, உன் நிலையைக் கண்டு வருந்தாதே! யாம் காணும் நிலையில், விளக்கம் கேட்டோம்! ஆனால் நீயோ, செயல் நிலையில், விளக்கம் தந்தாய்! அவ்வாறு தானே? காணும் காட்சி, சற்று நிதானமாக இருக்கும். ஆனால் செயல் முறை காட்சி, சற்று கடுமையாகத்தான் இருக்கும். ஆகவே, செயல் முறையில், விளக்கம் பெறுபவன், அசாத்திய **பொறுமை** உள்ளவனாக இருக்க வேண்டும்! யாம் காணும் காட்சியில் "**அறிவு**" சொரூபமாக இருப்பதால், அனைத்தும் **மண்** பொம்மைகளாகவும் கிட்டகிட்ட இயக்கமாகவும் தோணும். ஆனால் புத்திபூர்வமான, அனைத்தும் பொருந்தும் **மறைவடிவமாக** காணும், உன் நிலையில், உன் மனோ நோக்கு குணங்கள், அங்கே வழியில், செலுத்தப்படுவதால், அனைத்திலும்,



44

புண்ணிய பாவங்கள், இன்ப துன்பமாகவும்,
மண் பொம்மைகள் யாவும், "ஜீவ" சொரூபங்களாகவும்,
தோற்றுவது இயல்பே!
நீ காண்பது, ஜீவ நிலையாகும்! யாம் உணர்வது தெய்வ நிலை!
"பரசொரூப" நிலையில், இவ்விரண்டும் பொய்யே!
ஆகவே, தெய்வ நிலையில், மனதை ஸாந்தி
பண்ண வேண்டும்! அப்போது தான், பர நிலையில்,
மனதை அழித்த நிலை என்ற, மறைத்தாக்க முடியும்!
ஆனால் ஜீவ நிலை கூடவே கூடாது, என்பதற்காகவே,
இந்த நாடகம் நடத்திடுவோம். யாமும் உன் போன்று,
விருப்பு வெறுப்பு
கண்டிப்பு! தண்டிப்பு! வேதம்! குற்றம் குறை!
இவைகளோடு, பாடம் நடத்தினால் யாமும்
கீழே இழுக்கப்படுவோம். உன்னையும் "மேலே"
தூக்கவும் முடியாது! இங்கு நீயோ நாமரூப மோக
த்திலும், மனதை வேகத்திலும், சிக்கிக் கொண்டாய்,



"மாயா" சொரூபமான, நாமரூபங்களை, மாயை யாம் என விளக்கினோம். ஆகவேதான்; நீயும், உன் மனை "மயக்கங்கள்!" ளை விட, ஏது வாயிற்று! நாமரூப சொரூபங்களின், உண்மை, உணராமல் இருப்பவனிடம், எத்தனைதான், விளக்கம் சொன்னாலும். அவன் மனமயக்கம் ஒழியாது. அதனால் வரும், அவைவஸ்ய "பேதநும் / பிநற்றயும்" குணதோஷ "செய்கைகளும்" சாமானியமாக போகவே போகாது! ஆகவே முடிவாக, சொல்கிறோம். நாமரூப மயக்கங்களை விடுவது என்றால்? "பரமாகய மண்ணே "மாயா" யோக வாகிய, ஜவத்தை சேர்த்து, இணைந்து, பிணைந்து, பிசைந்து, "களி" மண் என ஆன தன்மையால், அது நாமரூப ஜக ஜீவ சொரூபங்களை, தோற்றம் எடுக்க, ஏதுவாகிறது என ஸத்தியமாக உணர்ந்து, ஜக "மயக்கத்தையும்" மனமய "வேகத்தையும்" விட்டொழிக்கால். அதுவே மனோ ஜயம் ஆகும்!



46

ஆனந்தவடிவம் என்பது ஓர் உபசார வசனமே! அது மெய்க்கு தரும் பொய்விளக்கமாகும். தன்னை அறிந்த ஞானிகள் தரும் சத்தியவாசகமாவது, அந்தரங்கம், பிரம்மானந்தம் எனப்படும் சொரூபம். அவ்வளவுதான்.

12

# காண்பவனை இரு! "காணும் பொருளாக இராதே!!"

காண்பவனை இரு:— காண்பவனை இருப்பது, மறைமெய, கற்பனை சொரூபமாகிய, "ஓம்" ஸ்ரீபகவானுடும்!

காணும் பொருளாக இராதே:— காணும் பொருளாக, இராதே என்றால், "நாமரூப" ஜகத்தின், அனித்து தோற்றங்கள் ஆகும்! (நாமரூப ஜகஜீவ தோற்றமாக இராதே)

இவ்விரண்டிற்கும், இன்றைய வேதாந்திகள், கொடுக்கும் விளக்கம்:— "ஆத்மாவாக" இரு! என்றும்; நாமரூப ஜகத்தாக இராதே! என்றும்;

கூறுவர். இதை உணர வேண்டும்!

ஆத்மா என்றுவோ! பரமாத்மா என்றுவோ! பரப்பிரம்மம் பரசொரூபம் என்றுவோ! மம் என்றுவோ! அதற்கு கண்ணும்! காதும்! வாக்கும்! அற்ற ஓர், "அசேதனா"! அசையாத! அசைக்காத! அசைக்க இயலாத! ஓர் "ஆனந்த" வடிவமாகும்!



ஆனந்த வடிவம்:- (1+7)

என்றால், அது **சுவையின்** அம்சமாகும். அதை சுவைப்பவர் உணர்வார். சுவைக்க இயலாதவர் உணரார். அது வரிக்கும் யாக்கைக்கும், எட்டாததாகும்.

வடிவம் என்றாலும், அது எத் தோற்றமும், இல்லாததாகும் (நாமரூபமாக இல்லாமலும், அருவமாக இருப்பதும் ஆகும்)

இருந்தும் இல்லாதது! இல்லாமல் இருப்பது! ஆகும்.

**ஒன்றுமில்லை!** (நாமரூபமில்லை) ஆனால் **ஒன்றுண்டு** (அது உண்டு)

என்றறிந்தால், நாமரூபம் அனைத்திற்கும்;

தோற்ற (நின்ற) ஆதாரமாயும்! தோற்ற (நின்ற) இருப்பாயும்!

தோற்ற (நின்ற) இயக்கமாயும்! தோற்ற (நின்ற) ஆதாரமாயும்!


இருக்கும், **பரசொரூபமாகும்!**

ஆகவே காண்பவனை இரண்டல், ஸ்ரீபகவானை இரு எனப், பொருள் கொள்ளலாம். அதன் அம்சமே ஸ்ரீபகவான்!

அது செயலற்றது! அவன் செயலுற்றவன்!

அவன் செயலுற்றாலும், ஜீவன் (ஜீவர்கள்) **முக்தியின்!**

அடிப்படையாகவே இருக்கிறான், என உணர வேண்டும். ஆகவே ஸ்ரீபகவானை இருப்பதும். ஆத்மாவாக இருப்பதும், ஒன்றுதான், என தன்னை அறிந்த, ஸ்ரீ மகான்களின், வாயிலாக, கேள்விப்படுகிறோம்.



(48)

அன்பு என்றால்
சைதன்யத்தின்
அனுபவ சுவை ஆகும்.
ஆசை என்றால் நாம
ரூப ஜகஜீவ தோற்ற
மயக்கம் ஆகும்!

நானும் பொருளாக (நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களாக) இராதே என்றால், இதை ஸ்ரீபகவான் நிலையிலிருந்து, உணர்ந்தால்,
நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களாக இராதே,
எனப் பொருள் கொள்ள வேண்டும். இங்கும்,
ஓர் உண்மை விளங்குகிறது. எப்படி என்றால்?
எல்லாம் ஸ்ரீபகவான் பொருள்! என்பதே ஸத்யம்.
ஸ்ரீபகவான் என்றால், தன் சிருஷ்டியின் பொருள்மீது
"அன்பு" வைப்பானே தவிர, "ஆசை"
வைக்கமாட்டான் என்பதும் ஸத்யமே!
அன்பு என்பது, "அறிவின்" வடிவம்!
ஆசை என்பது மனதின் வடிவம்!!
அறிவு தெய்வ சொரூபம்! மனம் மனித ஜீவ சொரூபம்!
நாமும் ஸ்ரீபகவான் (அறிவு) சொரூபமானால், மனித ஜீவ
"மனம்" நம்மிடம் இல்லா தொழியும்!



ஒன்றுமில்லை என்று (149)
உண்டு, ஆனால் இல்லை, என்று
சொல்லும் வாசகத்திற்கு
பொருள்:- நாமரூபம்
இல்லை என்றும்; அந்த
ஒன்றாகிய ஸ்வயம்ஜோதி
உண்டென்றும் பொருள்படும்!

நாமரூப, ஜகத் ஜீவ சொரூப மயக்கம், இல்லையானால்,

“காண்பவனை” இருப்போம்!

காணும் “பொருளாக” இருக்கமாட்டோம்!!

அறிவு என்றால், எல்லாம் நானே! எல்லாம் நமதே!

என்ற நிலையில்; “ஆசையற்ற” (அறவினைத்து ஒன்று படுத்தும் நிலையாகும்.

ஆசை என்றால், எல்லாம் நானே! எல்லாம் என்னுடையதே!

என்ற, “தோஷ” குணத்தோடு கூடிய, மனமிருக்கும்!

ஆகும். அது பிறவியின் வித்து ஆகும்!

இந்த ஸ்ரீ பகவான் நிலையாகிய, சாட்சி நிலை, பெற்று விட்டால்,


மனம் பாரம் இல்லாமல், லேசாகி விடும்! இங்கு எல்லாம்,

நம்முடையதாகவும்! நானேயாகவும்! ஆன தன்மையில்

சர்வசாட்சி நிலை (அகண்டமானது) இயல்பாகி விடும்!

அங்கு எல்லாம், பரமேயாகிய மனம் என்றும். மனோமயமான

பரமே என்றும்; ஆன நிலையில், மனோஜயம் இயல்பாகும்!



## (13) "காண்பவனைக்" இருந்தால்!


மனோவிகல்பம் இல்லை! நனவு, கனவு, சுஷுப்தி இல்லை! உம்யும் வஷ்டியாகிய, மோக்ஷம் (பூத முக்தி) இல்லை! ஜனனமரணமும் இல்லை!

"காணும்" பொருளாக இருந்தால், அப் பொருளுக்கு "மனமும்" உண்டு. அப் பொருளும், அம் மனமும், உண்டானால், மேலே கூறிய, குற்றம் குறை! பேதம்! விருப்பு! வெறுப்பு! உண்டு.

நனவில், அப் பொருளைத் தேடும், "வீண்" அலைச்சலும் உண்டு. கனவில் அப் பொருள், உன்னைத் தேடி வரும் "வீண்" மனோ உழைச்சலும் உண்டு.

சுஷுப்தியில், நம் ஆத்மாவுடன் சேரவும்! பிரியவும்! சேரவும்! பிரியவும்! சேரவும்! பிரியவும்! இப்படியே, விட்டு விட்டு, அனுபவிக்கும் சுகமும் உண்டு.

ஆனால் நிலைத்த "ஆனந்தம்" இல்லவே இல்லை! நினைப்பும் மறப்புமான, ஜனனமரண சுழற்சியும் உண்டு!



"காண்பவரை" (ஸ்ரீபகவானை) இருந்தால், மேலே கூறிய, எந்த அவஸ்தைகளும், உபாதைகளும், சாதனை, சோதனை, வேதனை, வாதனை, ஆகிய எவையும், இல்லாமல், ஆரம்ப நிலையில், பேரானந்தமாக இருக்கலாம். பின் நாம், நாமாக இருக்கும் பிரம்மானந்தமும் ஆகலாம்! அந்நிலையில் பரமாகிய, மண்ணே நாம் என்றும், மண்ணாகிய பரமே நாம் என்றும், மனமற்ற நிலையில், இருக்கலாம். அதுவே மனோ ஜயம் ஆகும்!

(14) "கள்ளமனம்" நாமரூப ஜகத்தை விடாது.

"நல்லமனம்" நாமரூப ஜகத்தை நாடாது.

(1) கள்ளமனம் :— சொந்த பந்த உறவுகளையும், பொன் பொருள் (தொழில்) மோகத்தையும், இனிமை, பெண் இன்ப, போதையின் போதத்தையும், பட்டம், பதவி, கௌரவ அந்தஸ்துகளின் "வெறி"யோடு அவிவேகத்தையும், இவைகளின் "மாறுவாண" ரோஷத்தையும், இவைகளால், பின்னி பிணையாரும்,




இப்போதும் வரவும், ௫௨
சொர்க்கம் வாழ்க்கையும்,
இல்லையானால் மறுசாடிணைம்!

அவனே அனைத்துமாய்!
அனைத்தும் அவனாய்!
அவனே நாமாய்! நாமே
அவனாய்! நமக்கு அன்னியம்
எதுவும் இல்லாத பேரானந்தம்
அந்த பிரம்மானந்தமே பெறுவாயே!

இல்லாத, "நாமரூபஜக" வாழ்வையும்,
எண்ணி எண்ணி ஏமாந்து, அந்த இனிமை பிறவி,
இவைகள் விட்டால், நாம் என்னவாவோம்?
எப்படி இருப்போம்? இப்போதுவரை இல்லையானால்,
நாம் நாறிப் போவோமே? நமக்கு நாதி இருக்குமோ?
ஆகவே நமக்கு பக்தியும் வேண்டாம்! ஞானமும் வேண்டாம்!
ஊரோடு ஒத்து வாழ்! என்ற கலிகோஷ, வாழ்க்கைக்கு
இடம் கொடுத்து, சந்தேகம்! காங்கம்! கலக்கம்! பயம்
துக்கம்! இவைகளில் மயங்குவது, கர்ம மனம் ஆகும்!

இவை அனைத்திற்கும், ஒட்டு மொத்தமாக,
"தெய்வநம்பிக்கை" இல்லாததே!
கர்மமனம் ஆகும்! அப்படியே சற்று தெய்வநம்பிக்கை
இருந்தாலும், அவை வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்!
முறையே எதிர் பார்ப்பு என்ற, பேர நிலையிலும்,
" பிறர் புகழும் தற்புகழ்ச்சி " ;
" வீண் கர்வம், டம்பம், படாடோபம் " ;
"செய்து, செய்து, செய்து, செய்து, செய்து, செய்து!
பயத்தினை" உண்டுபண்ணுவது கர்ம மனமாகும்.



இக்கள்ளமனமானது, நாமரூப, ஜக ஜீவ தோற்றங்களை
சத்தியமாகவும்! நித்தியமாகவும்! நிரந்தரமாகவும்!
நம்பி! நம்பி! நம்பி! நம்பி! நம்பி! நம்பி!
ஒவ்வொரு "மாற்றத்திலும்" ஏமாந்து!
தடுமாறி! நிலைமாறி! வகைமாறி! உருமாறி!
ஜனன மரண, ஈ பந்தில் வீழ்த்துவது, கள்ளமனம் ஆகும்!

௨ நல்லமனம் :- சொந்த, பந்த உறவுகளையும்,
பொன், பொருள், தொழில், குடும்பம், போக்குவரவு,
கொடுக்கல் வாங்கல், ஆகிய அனைத்திலும்! இவை
அனைத்தும், அவன் செயல்! அவன் பொருள்! அவன்
இயக்கம்! அவனன்றி அணுவும் அசையாது! என்ற,
"உறுதிநிச்சயத்தால்" உள்ளக்
"களி"யும்! உள்ள "நெகிழ்"வும்! கண்ணீர்
பெருக்கமும்! உள்ள உருக்கமும்! கொண்டு எந்த விதமும்
ஏது நடந்தாலும்! ஏது கிடைத்தாலும்! ஏது இருந்தாலும்!
ஏது வந்தாலும்! ஏது போனாலும்! ஏது நாசமானாலும்!



உ

இது ஸ்ரீபகவானின் "கருணையே"

என, பணணணணணணணணணணணணணணணணணிவும்!

"நிறைவும்" கொண்டு, ஆழ்ந்த திருப்தியுடன்,

"இறை குரு" உணர்வுடன், இருப்பது நல்ல

மனம் ஆகும்! இதுவே "ஆழ்ந்த" பக்தி ஆகும்!

அந்த ஸ்ரீ ஸத்குருவின், வாக்கிய சரத்தையான,

"மண்ணில்" பாண்டம் இல்லை! என்றும்,

"மண்ணில்லாமல்" பாண்டம் இல்லை!

என்ற உண்மைத் தெளிவால், அனைத்து நாமரூபங்களும்

மண்ணுக்கு, அன்னியமில்லை என்றும்! அம்மண்


பரத்திற்கு, அன்னியமில்லை என்றும்! அதனால் அந்த

பரத்திற்கு, நாம் அன்னியமில்லை என்றும்,

"ஜக, ஜீவ, பர (தேவதெய்வங்கள்) எல்லாம் ஒன்றே!

ஒன்றே எல்லாம்! என மனம், மனத்தாகி பரத்தில் கரைவது

மனோஜயம், பெற்ற நிலையாகும்!



# (15) சும்மா இருந்தால் ஸித்பரம்! சிந்தித்தால் சித்தத்தின் வடிவம்!

(1) மனம்! புத்தி! சித்தம்! ஆகிய இம் மூன்றும் ஒன்றே!
இம் மூன்றிற்கும், விளக்கம் பல இடங்களிலும்,
கொடுத்துள்ளோம். இங்கு மனம் என வைத்தே, ஓர்
விளக்கம் தருகிறோம். உணர்வால் உணர்க!
மனம்:- சும்மா கிடந்த சங்கை, ஊதிக்
கெடுத்தானாம் ஆண்டி! என ஓர் பழமொழி உண்டு.
அதைப் போலவே, வெளியில் போகும் ஒன்றை,
நம் தலையில், நாமே போட்டுக் கொண்டு, கதை போல!
பொன்னோ! பொருளோ! உறவோ! சுற்றமோ!
அதனதன்! அவரவர்! புண்ணிய பாப கர்மாக்களை,
ஒழுங்காகவும், பாரபக்ஷம் இல்லாமலும், விகிதாச்
சாரப்படி, திட்டமிட்டபடி, வந்தும் போயும்!
கொடுத்தும் வாங்கியும்! பண்டப் பரிவர்த்தனம்.
இயற்கையின் நியதியில் ஸ்ரீபகவான் சந்நிதியில்
இயல்பாகவே எவர்க்கும், எந்த சிரமமும் இல்லாமல்.



பிரமாணமாகச் சொல்கிறோம். ஓர் சாதகன் தன் எண்ணம், சொல், செயல், இம் மூன்றிலும், நான், என்றல், எனது, விட்டுவிட்டு, மாறுக எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உனக்கு, என ஆகின்றால் போதும். சாதனை முழுமை பெறும்.

நடைபெறுகிறது என்பதே, பிரமாண உண்மையாகும். ஆனால் இந்த "லோகமாயாமனமானது" எனக்கு உனக்கு என்ற, போட்டி பொறாமையிலும், நான், நான், என்றும், என்றல், என்றல், என்றும், யானையானது, எப்படி சேற்றையும், புழுதியையும், தன் தலையில் தானே, வாரிக் கொட்டிக் கொண்டு போல், "மனோ" சிரமங்களையும், அதனால் இணைந்து வரும், "தாப" உபாதைகளையும், அதனால் பின்னிப் பிணையும், புண்ணிய பாப வினையால் வரும், "ஜனனமரணத்தையும்" வலிய ஏற்றுக் கொள்கிறான். இதற்கு, ஸ்ரீபகவான் பொறுப்பாக மாட்டான். இவனுடைய மாயாமனமே, பொறுப்பாகும். அம்மனதையும், ஸ்ரீபகவானே, ஏற்றுக் கொள்ளலாமே, என அறியாமையினால், கேட்கிறார்கள். அவசியம் ஏற்றுக் கொள்வான். அவன் "கருணையே" வடிவானவன். அன்பின் சொரூபமானவன். கூப்பிட்ட குரலுக்கு, ஓடி வருபவன் தான்.



கருணை என்றால்?:- (57)
அனைத்தையும் உனக்காகவே கொடுத்தான் அவன் உன்னிடம் எதையுமே கேட்கவில்லை. என் பொருளாக எண்ணி விளையாடு. அதை உன் பொருளாக எண்ணாதே என்றான். உன் பொருளாக எண்ணுவதால் மறு அவனை தையும் தாவதிரமாக்கி... உனக்கு என் வேண்டும் என்று பரிவோடு கேட்கிறான். நீயோ அவனை மறந்துவிட்டாய். அவன் பொருளை எண்ணுகிறாய்.

அவனை அழைக்கமாட்டேன் என்கிறாயே! ஆச்சரியமாக இருக்கா? நாமரூப, ஜக பொருள் உறவு, சுற்றத்திடம் இருக்கும், பரிவும், பாசமும், நேசமும், மோகமும், வேகமும், "அவனிடம்" உண்டா? இல்லவே இல்லையென, பிரமாணமாகச் சொல்லுவோம்!

௧ நீ அழைக்காமல் அவன் வரமாட்டான்! வரக் கூடாது! வர இயலாது!

௨ நீ கொடுக்காமல் அவன் எடுக்கமுடியாது! எடுக்க கூடாது! எடுக்க இயலாது! "காரணம்?"

நாமரூப ஜக சொரூபம் அனைத்தும், அவனுடையதாக இருந்தாலும்; "எனது! எனது!" என நீ சொந்தம் கொண்டாடி, உரிமையும்! உடைமையும்! கொண்டாடிய தன்மையினால், அவை அனைத்தும், உன்னுடைய "குணா தோஷத்தினால்" "மாசு" பட்டுவிட்டது! என்ற நிலையிலும்; நீ எனது என, சொந்தம் கொண்டாடியதை, எடுத்துக் கொடு என, கேட்கவோ! எடுக்கவோ! அவனுக்கு உரிமையும் இல்லை! அந்நியனால், கருணை இல்லாதவனில்லை!




ஸ்ரீபகவான் சூட்சுமம். (58)

எனது என கொண்டாடிய தன்மையில் நாமரூப பொருள்களும் குண தோஷ சூட்சுமம் ஆகி விட்டது. ஆகவே சூட்சும குண தோஷங்களற்ற சூட்சும ஸ்ரீபகவானிடம் எல்லாம் நீயே என்ற சூட்சுமவாக்கால் அர்ப்பணம் செய்யும் போது சூட்சுமம் சூட்சுமத்தை ஒன்றாக் கொள்கிறது.

(6) உன்னுடைய உறவு, சுற்றம், நட்பு, குழந்தை குட்டி பேரன் பேத்தி, ஆகிய "ஜடசொரூபத்தை" ஓர் நாமா சொல்லி பிரியமாக எப்படி அழைக்கிறாய்! அவற்றை அழைப்பது என்றால், "ஒப்பனைக்கு" அழைக்கிறாய் "உண்மை"யாக அழைப்பதில்லை. அப்படியே அழைத்தாலும், பொழுதிற்காக! அதாவது வியாபாரத்திற்காக! ஓர் எதிர்பார்ப்புக்காக! அழைக்கிறாயே தவிர, "நீ தான்" வேண்டும்! "நீ வந்துவிடு"! நீ வந்தால் "போதும்" என மனமே நிரம்பியோடு! அழைப்பதில்லை என்பதை, பிரமாணமாக சொல்லுவேன்!


இதன் காரணம்?

உன் மனக்கண்களுக்கு, தோன்றுவதை, உண்மையென, நம்புகிறாய்! உன் அறிவால், உணர்வதை உன் மனம் நம்ப மறுக்கிறது! பார்ப்பதில் எத்தனை மாற்றம்? அதனால் ஒரு மாற்றம் என்பதும், உணர்வதில், எத்தனை பெரிய எப்படி ஒரு மாற்றம்? என்பதும் உண்மை இருக்கிறது! என்பதும் உன்னை உணர முடியவில்லை காரணம்? ஜகவாஸ, தோஷ, பழக்க வழக்கமே ஆகும்!



நீ அழைக்காமல், அவன் வர மாட்டான்! நீ கொடுக்காமல் அவன்
எடுக்க மாட்டான்! என்ற நிலைப்படியும், நீ உணராமல்
கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! உண்டதே இன்பம்!
இவைகளில், வீணே கற்பனை செய்து, மனோ அவஸ்தையும்,
தூல இரமங்களையும்! வீணே நமக்கு நாமே, ஏற்படுத்திக்
கொள்வதே; சும்மா கிடந்த சங்கை, ஊதிக் கெடுத்தானாம்
ஆண்டி! என்பது போலும்; வேலியில் போனதை ஓணான், தன் தலையில்
பிடித்து விட்டு, அவஸ்தைப்படுவது போலும்; இந்த மனம்,
படுத்தும் பாடு, சொல்லி முடியாது!

(2) இப்படி மனோ அவஸ்தையை, விலை கொடுத்து வீணில் வாங்கி
அவஸ்தைப்படுவதை, விட்டொழித்து, முன் கூறிய
நிலையில், சர்வார்ப்பணமும்! முடிவில் பிரம்மார்ப்பணமும்
செய்து "சஞ்சலம்" அற்றிருப்பதே,
சித்தத்தை "ஸித்பரம்" ஆக்கும் நிலையாகும்!
ஸித்பர நிலையில் இருந்து கொண்டு எல்லாம் மனோ
திய பரமே! அப்பரத்திலிருந்து அன்னியம், ஏதுவும்
இல்லையென, "அசைவு" அற்றிருப்பது! மனோஜயம் ஆகும்.



(16) குருவாகவும்! சீடனாகவும்! உலகமாகவும்!
தோற்றும், அப் "**பேதத்தை**!"
உற்றிட "**பாவனையால்**" மனதை வெல்!
ஸத்தியம் புகல்கின்றவன் "**குரு**" ஆகும்!
அஞ்ஞானம் என்னும்; அதாவது அறியாமை என்னும்;
அதாவது கவனக்குறைவு என்னும்; "**மனமய்**"
மயக்க போதையில் உழன்றும்; ஞானவேட்கை
யுடனும்; ஸத்தியத்தை அடைய வேண்டும் என்ற,
உள்ளத்துடிப்புடனும்; நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்
களில், சிப்பியின் வெள்ளியென "**மயக்கம்**"
அற்றவனாய்; உண்மையின் ஏக்கம் உள்ளவனே;
"**ஸத்சீடனாவான்**"!
இவ்விருவருக்கும் மத்தியில், நாமரூப ஜகமானது,
கட்டையில் வந்த கள்வனோ! பேயோ! போலவும்;



ஒன்று இல்லாமல்
மற்றொன்று,
தோன்றாது! தோன்ற முடி
யாது! தோன்றியவை.
ஆகவே அதிஷ்டானமாகிய
பரசொரூபத்திலிருந்து (மண்)
ஆரோபமாகிய ஜகஜீவ நாமரூ
பமாகிய பதுமைகள் தோன்றின என்பதே சத்தியம்!

கானலில் தோன்றும், ஜலம் போன்றும்; கல்லில்
வந்த, நாய் போன்றும்; மரத்தில் வந்த, யானை போன்றும்;
கயிற்றில் வந்த, சர்ப்பம் போன்றும்; மேகக்
கூட்டங்களில் தோன்றும், கந்தர்வ நகரம் போன்றும்
அதாவது "அதிஷ்டானத்தில்"
தோன்றும்; "ஆரோபம்" போன்று;
"அந்த ஒன்றில்" தோன்றிய;
"இந்த நாமரூப ஜகம்! என உண்மையில்
உணர்ந்து, ஆரோபத்தைதள்ளி! அதிஷ்டானத்தில்
நிலை பெற்று, மனோமய பேதபாவனையை, நீக்கி விட்டால்;
குருவும் இல்லை! சீடனும் இல்லை! இவர்கள் பாடம்
நடத்தியதாக கூறும், நாமரூப உலகமும் இல்லை!
என்ற நிலையில்; எல்லாம் மண்ணே! மண்ணாகிய
பரமே! பரத்திற்கு அன்னியம், எதுவும் இல்லை என்ற
மெய்யுணர்வில் இருப்பது. மனோ ஜயம் பெற்றநிலையாகும்.
குறிப்பு:- குரு! சீடன்! உலகம்! ஆகியவை, நாமரூபமாக
இல்லை! அந்த ஒன்றாக, இருக்கிறீர்கள்; என்பதே
சத்தியம்!

(௬௨)



செறிந்த மனம்:- விஷயங்களில், இணைந்து, பின் பிணைந்து, கலந்தல்! மயமாகுதல் அல்லவா

(17)

"செறிந்த" மனம், ஓர்மை ஆக வேண்டும்.


அப்படியானால்தான், "நிறைந்த" பரிபாலனையால், மனதை வெல்லலாம்!

அதாவது, நாமரூப நிலையில், சிக்கிய மனம். இது அல்ல. இது அதுவே என, ஓர்மை ஆக வேண்டும்!


அதாவது, நாமரூப, பொன் பொருள்! உறவு சுற்றம்! இவைகளின், போக்கு வரவும். கொடுக்கல் வாங்கலும்!

"விதி" யோகத்தை ஒழுங்காக நடத்துவது "விதி"யின் (ஸ்ரீபகவானின்) மாயாவின் செயலாகும்.

மனம் எண்ணினாலும், எண்ணவிட்டாலும், நடந்தே ஆகும். நடந்தே ஆக வேண்டும். இவ் "மனம்" ஆழ்ந்தால், நினைப்பற்று பரமாகி, பின்னரும் தொடர்பு உண்டாகும், எனத் தெளிந்து, இருப்பது ஒன்றே (பரமாகிய ஸ்ரீபகவானும் ஸ்ரீபகவானாகிய பரமும் ஒன்றே) என்றும். அங்கு இரண்டற்ற தன்மையில், நடப்பது நலமே என்றும்,




அங்கு மனமயக்கப் பனியின், தோஷ குணங்களுக்கு, இவ்
இடமே என்று, உறுதி நிச்சயத்தால் தெளிந்து,
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே!
என்ற, மன "ஓர்மை" வேண்டும்! இந்த ஓர்மை
நிலை பெறும் போது, எல்லாம் ஒன்றே! அது இதுவே!
அது யாதுமே! யாதுமே அது! என்ற "பராபரன்"
நிலை பெற்ற ஸ்திரமாகும். இந் நிலையில் தான்,
மனதை வெல்ல முடியும். இதுவே மனோஜயம் ஆகும்.
(18) குற்றம் குறை! பேத உணர்வு! இவைகளின்
சந்தம் இல்லவே இல்லை.
அச்சத்தக்கால், நாமரூபமாக தோற்றும் "ஜகமும்"
இல்லவே இல்லை!
இச்ஜகத்தையும், அதன் பொருட்களையும், சொந்தம்
கொண்டாடும், "அஹங்காரமும்"
இல்லவே இல்லை!
"அகண்ட" பரப்பிரம்மம் ஒன்றே ஸத்தியம்!



(A) குற்றம் குறை, பேத உணர்வு, விருப்பு வெறுப்பு,
இவை அனைத்தும், சித்த "மன" வடிவமான,
"புண்ணியபாப" கற்பனையாகும்.
இப் புண்ணியபாபங்கள், அரிப்பெடுக்கும் புண்ணை
சொறிவது போன்று, ஓர் இன்ப மயக்கம், தருவனவாகும்.
கண்களுக்குத் தெரிகின்ற, இன்பமயக்க போதையையே
ஸத்யமாக நம்பும் மனம்.
கண்களுக்குத் தெரியாத, "அறிவு" பூர்வமான,
மெய்யுணர்வைக், கொடுக்கும் அறிவை (ஸ்ரீபகவானை)
நம்ப மனம், மறுக்கத்தான் செய்யும். அதன் காரணம்?

(B) கண்ணால் காணக்கூடிய, நாமரூப ஜகம், ஸத்திய
மாகவும், அறிவுக் கண்ணால், உணரக்கூடிய,
ஸ்ரீபகவான், கற்பனை சொரூபமாக, "நழுவ"
விட்டதன்மையால், "ஜகம் தோற்றுகிறது."
நம் தாவமும் நாமரூபம். நாம் காணும் ஜகமும்
நாமரூபம். ஆகவே இவ்விரண்டும், இணைகிறது. பிணைகிறது.



அதைப், ஜனன மரணம் உண்டாகிறது.

(உ) இப்படி நம் தேகமும், இந்த ஜகமும், நாம ரூபத்தோடு, இணைந்து பின்னிய, மூல காரணமாக அமைவது, "நான்! என்னுடைய! எனது! என்ற "அஹங்காரம்!" அகன் அம்ச, அதிகார, ஆதிக்கமேயாகும்.

மேலே சொன்ன, மூன்றுமே மன "எழுச்சி" ஆகும்.

இம்மனோ எழுச்சியானது, முன்பு இடங்களில் கூறியபடி சர்வார்ப்பணத்தினால்தான், சர்வநாசமாகும், அதன்பின, பிரம்மார்ப்பணத்தினால், "ஸத்யம்" பிரகாசிக்கும் நிலையில், எல்லாம் மண்ணே! என்றும் மண்ணாகிய மரமே! என்றும், அதுவே நாம் என அறியும் போது, அதுவே "மனோஜயம்" ஆகும்!

(19) மனோஜயம் சாத்தியமாகும் வரை, "மனோவியாபாரத்தை" விட்டே ஆகவேண்டும்! (வியாபாரம் விடாமல், மனோஜயமாகாது!)



"வியாபாரம் என்பது போக்கு வரவு! கொடுக்கல் வாங்கல்! இவைகளில் நான், என்றல், எனது, என மனை எழுச்சி அடைதல் ஆகும். முன் கூறிய சர்வார்ப்பணத்தால் முன் கூறிய அனைத்தும்,

# மனை வீழ்ச்சி

ஆகுவதாகும். அதாவது வியாபாரம் நாசமாகிறது

"மனை" வியாபாரம், அழிந்தாலல்லாது, மனோஜயம் இல்லை!

மனை வியாபாரம் என்பது, எண்ண அழுத்தம் ஆகும்!

எண்ண அழுத்தம் என்பது, கர்மாவின் பலன் கருதி செய்வது!

கர்மாவின் பலன் என்பது, செயலின் மோஹ வேகம்!

செயலின் வேகம் என்பது, சீக்கிரம் சீக்கிரம், என்ற அவசரம்!

சீக்கிரம் அவசரம் என்பது, அவசரமாக ஜனனம் எடுப்பது!

ஜனனம் எடுப்பது, "பரோபகாரம்" என்ற பாசவலை!

பாசவலை என்பது, பிறருக்காக வாழ்ந்து, தன்னை இழக்கல்!

பிறருக்காக வாழ்வதால், புதிய கர்மா சேகரிக்கல்!

தன்னை இழப்பதால், தான் வந்த காரியத்தை மறக்கல்!

புதிய கர்மா சேகரித்தாலும், வந்த காரியத்தை மறந்தால்
புல்லாகி, பூண்டாகி, மரமாகி, பலபல மிருகமாகி, பறவையாய், பாம்பாகி, புழு பூச்சியாய் எடுப்பதற்கு, அந்த அவசரம்! "ஜனனம்" இது தேவையா?

மேலே கூறிய, இவை அனைத்திற்கும், மூல காரணமாவது:



"அஹங்கார/மமகாரம்" ஆகும்.

(நான்! என்னுடைய! எனது! என்ற நிலையில்) அதிகாரம், ஆதிக்கம், உடைமை, உரிமை, மானவமானம், நேசம், பெட்டகம், கூடு, சுற்றம், பற்று, முதலிய இவை பெருக்கத்தையும் விடாமலும், விடமுடியாமலும், விடமுயலாமலும், சுடர் விளக்கை, பழம் என நம்பி, அதை உண்ணும் வேகத்தில் சென்று, அக்கினியால் தான் உண்ணப்பட்டு. (கருகிப் போம்)

"வாழ் "நாள்" வீண்" நாளாக்குவது, மனோவியாபாரம் ஆகும்.

மேலே கூறிய இவைகளுக்கு, மூலதனமாக அமைவது:—

"மண்/பொன்/பெண்" என்ற மூவாசை ஆகும்.

இம் மூன்றையும், விட்டாலன்றி, மனோ வியாபாரம் தொலையாது! இவைகளை விட வேண்டுமானால், எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடைய! எல்லாம் உனதே! என சர்வார்ப்பணம் ஆக வேண்டும். இந்த சர்வார்ப்பணமே, மனோ வியாபாரம், ஒழிந்த நிலையாகும்! மனோ வியாபாரம் ஒழிந்து விட்டால், மனோஜயம் இயல்பாகும். மனோஜயம் இயல்பானால், பிரம்மார்ப்பணமாகி பரமே நாம்! நாமே பரம்! என ஆக, எந்த தடையும் இல்லை!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!